பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
30 07 2024 7 15
செவ்வாய்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக இந்தியா உருவாகும் நாள் தொலைவில் இல்லை என்று பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.
2. கோவிட் பெருந்தொற்றுக்குப் பிறகு உலக அளவில் அதி விரைவாக வளர்ந்து வரும் பொருளாதாரமாக இந்தியா திகழ்கிறது என்று நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.
3. கேரள மாநிலம் வயநாட்டில் எற்பட்ட நிலச்சரிவு மிகவும் மோசமான இயற்கை பேரழிவு என்று அம்மாநில முதலமைச்சர் திரு பினராயி விஜயன் கூறியுள்ளார்.
4. இளநிலை மருத்துவ படிப்புக்கான நீட் முதற்கட்ட கலந்தாய்வு அடுத்த மாதம் 14-ஆம் தேதி தொடங்கும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.
5. பாரிஸ் ஒலிம்பிக் துப்பாக்கி சுடும் போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்றுள்ள மனுபாக்கர் - **Sarabjot Singh** இணைக்கு குடியரசுத்தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

**[]<<<>>>[]**

உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக இந்தியா உருவெடுக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை என்று பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று பட்ஜெட் தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வளர்ச்சியடைந்த பாரதத்தை நோக்கிய பயணம் என்ற கருத்தரங்கில் உரையாற்றிய அவர், நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி எட்டு சதவீதமாக அதிகரிக்கும் என்று தெரிவித்தார்.

கோவிட் பெருந்தொற்றுக்குப் பிறகு பொருளாதார சிக்கலிலிருந்து மீள்வதற்கு இந்தியா கடுமையாக போராடியதாகவும் அவர் கூறினார்.

அனைத்து துறைகளிலும் வளர்ச்சி பெறுவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருவதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

நாட்டின் உள்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகளை முன் எப்போதும் இல்லாத அளவுக்கு முழுவீச்சில் செயல்படுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

நாட்டின் மூலதனத்துக்கான செலவினம் வளர்ச்சியை எட்டுவதற்கான முதலீடு என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 2004-ஆம் ஆண்டு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் மூலதனச் செலவினமாக 90 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றும், ஆனால் 2014-ஆம் ஆண்டு தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில் இது இரண்டு லட்சம் கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மொத்த பட்ஜெட்டின் அளவு மும்மடங்கு அதிகரிக்கப் பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்,

அனைத்து துறைகளுக்குமான ஒதுக்கீட்டில் அரசு சாதனை படைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

குறைந்த அளவு பணவீக்கத்தோடு விரைவாக வளர்ச்சிபெறும் நாடாக இந்தியா உள்ளது என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

கடந்த பத்து ஆண்டுகளில் 25 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் வறுமையின் பிடியிலிருந்து மீட்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்கள் வளர்ச்சிக்கும், வேலைவாய்ப்புக்கும் அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாகவும் திரு நரேந்திரமோடி கூறினார்.

[]<<<>>>[]

மாநிலங்களவையில் இன்றும் நடப்பு ஆண்டு பட்ஜெட் மீதான விவாதம் தொடர்ந்து நடைபெற்றது.

இதில் பங்கேற்ற தேசியவாத காங்கிரஸ் உறுப்பினர் திரு பிரபுல் படேல், நாட்டின் நிதி நிலைமையை பாதுகாக்க கடந்த பத்து ஆண்டுகளாக அரசு சரியான நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவித்தார்.

பட்ஜெட்டில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கான பல்வேறு அறிவிப்புகள் இடம்பெற்றுள்ளதாகக் கூறினார்.

சாலை வசதி, விமான போக்குவரத்து, துறைமுகங்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உள்ளிட்ட துறைகளில் நாடு முன்னேற்றம் கண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அவரைத் தொடர்ந்து பேசிய பிஜேபி உறுப்பினர் திரு புபனேஸ்வர் கலிதா, ஏழை எளிய விவசாயிகள், இளைஞர்கள், மகளிரின் முன்னேற்றத்திற்கென பல்வேறு அறிவிப்புகள் பட்ஜெட்டில் இடம் பெற்றிருப்பதாகக் கூறினார்.

நாட்டின் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

80 கோடி மக்களுக்கு விலையில்லா உணவு தானியம் வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருவது வரவேற்கத்தக்கது என்றும் அவர் கூறினார்.

விவாதத்தின்போது குறுக்கிட்டு பேசிய மத்திய அமைச்சர் திரு ஜெ பி நட்டா, உள்ளார்ந்த பொருளாதார வளர்ச்சிக்கும், சமூக மேம்பாட்டுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கான திட்டங்களும் இதில் அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அனைத்து தரப்பினருக்குமான வாழ்வாதாரத்தை மேம்படுத்தி அவர்களுக்கான அதிகாரத்தை உறுதி செய்வதில் மத்திய அரசு அதிக கவனம் செலுத்தி வருவதாகவும் திரு ஜெ பி நட்டா கூறினார்.

[]<<<>>>[]

கோவிட் பெருந்தொற்றுக்குப் பிறகு உலக அளவில் அதி விரைவாக வளர்ந்து வரும் பொருளாதாரமாக இந்தியா திகழ்கிறது என்று நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று பட்ஜெட் மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசிய நிதி அமைச்சர், 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

பட்ஜெட்டில் வேளாண்மை, ஊரக மற்றும் நகர்புற வளர்ச்சி, சுகாதாரம், சமூக நலன் உள்ளிட்ட அனைத்து துறைகளுக்கும் அதிக அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

விரைவான பொருளாதார வளர்ச்சியை எட்டுவதன் மூலம் வருமான ஏற்றதாழ்வுகளை களைய முடியும் என்றும் அவர் கூறினார்.

நிதிப் பற்றாக்குறையைக் குறையை அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்த அவர், அடுத்த ஆண்டுக்குள் நான்கு புள்ளி ஐந்து சதவீதமாக நிதி பற்றாக்குறையை குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று திருமதி நிர்மலா சீதாராமன் தொவித்தார்.

[]<<<>>>[]

தற்போது நடைமுறையில் உள்ள ஓய்வூதியத் திட்டத்தை ஆய்வு செய்வதற்காக குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்று நிதித்துறை இணை அமைச்சர் திரு பங்கஜ் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இது தொடர்பான கேள்விக்கு எழுத்துபூர்வமாக அவர் அளித்துள்ள பதிலில், புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்துவிட்டு, பழைய ஓய்வூதிய திட்டத்தையே மீண்டும் கொண்டுவர வேண்டுமென வந்துள்ள கோரிக்கைகள் குறித்தும் இந்த குழு ஆய்வு செய்யும் என்று கூறியுள்ளார்.

எட்டாவது ஊதியக்குழுவை அமைப்பது குறித்த திட்டம் மத்திய அரசின் பரிசீலனையில் இல்லை என்றும் திரு பங்கஜ் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

கேரள மாநிலம் வயநாட்டில் பெய்த அதி கனமழை காரணமாக நேரிட்ட நிலச்சரிவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 93-ஆக அதிகரித்துள்ளது.

இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

தேசிய பேரிடர் மீட்புப்படையினர் மற்றும் மாநில மீட்புக் குழுவினர் இடிபாடுகளில் சிக்கி உள்ளவர்களை மீட்கும் பணியை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்களை மீட்டு அடையாளம் காண்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக கேரள முதலமைச்சர் திரு பினராயி விஜயனை, பிரதமர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டறிந்தார்.
கேரள அரசுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அளிக்க மத்திய அரசு தயாராக உள்ளதாக பிரதமர் அப்போது உறுதியளித்தார்.
இதனிடையே நிலச்சரிவினால் உயிர் மற்றும் உடைமைகளுக்கு ஏற்பட்டுள்ள பேரிழப்பை அடுத்து இரண்டு நாள் துக்கம் அனுசரிக்கப்படுவதாக கேரள அரசு அறிவித்துள்ளது.

அரசு நிகழ்ச்சிகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டுள்ளன. தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே திருவனந்தபுரத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அம்மாநில முதலமைச்சர் திரு பினராயி விஜயன், கேரளாவில் இதுவரை இல்லாத அளவுக்கு பேரழிவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

வயநாடு பகுதியில் நிலச்சரிவினால் பாதிக்கப்பட்டவர்களை மீட்க இரண்டு விமானங்கள் பணியில் ஈடுபடுத்தப்படும் என்று கூறினார்.,

30 பேர் கொண்ட தேசிய பேரிடர் மீட்புப்படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மீட்புப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிகளிலிருந்து ஐயாயிரத்து 500-க்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கென திருவனந்தபுரம் மற்றும் கோழிக்கோட்டில் கட்டுப்பாட்டு அறை திறக்கப்பட்டுள்ளதாகவும் திரு பினராயி விஜயன் கூறினார்.

**[]<<<>>>[]**

வயநாட்டில் நிலச்சரிவினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கேரள முதலமைச்சர் திரு பினராயி விஜயனை தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டறிந்தார்.

தமிழக அரசின் சார்பில் தேவையான அனைத்து உதவிகளும் செய்து தரப்படும் என்று அப்போது அவர் தெரிவித்தார்.

முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிருந்து ஐந்து கோடி ரூபாயை கேரள அரசுக்கு வழங்க தாம் உத்தரவிட்டிருப்பதாகவும் திரு மு க ஸ்டாலின் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

இளநிலை மருத்துவ படிப்புக்கான நீட் முதல்கட்ட கலந்தாய்வு அடுத்த மாதம் 14-ஆம் தேதி தொடங்குகிறது.

மாநிலங்களவையில் இதைத் தெரிவித்த மத்திய சுகாதாரத்துறை இணை அமைச்சர் திருமதி அனுப்பிரியா படேல், உச்சநீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் நான்கு கட்டங்களாக இந்த கலந்தாய்வு நடைபெறுவதாகத் தெரிவித்தார்.

கலந்தாய்வுக்கான பதிவு முதல் வாரத்தில் தொடங்கும் என்றும் அவர் கூறினார்.

முதல்கட்ட கலந்தாய்வு அடுத்த மாதம் 14-ஆம் தேதி முதல் 23-ஆம் தேதி வரை நடைபெறும் என்றும் திருமதி அனுப்பிரியா படேல் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தின் ரயில்வேத் துறைக்கு நடப்பு ஆண்டில் ஆறாயிரத்து 362 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள வலைதளப் பதிவில் ஆயிரத்து 302 கிலோ மீட்டர் தூரத்திற்கு புதிய ரயில்பாதைகள் அமைக்கப்பட்டிருப்பதாகவும், 687 ரயில் மேம்பாலங்கள் மற்றும் அடிமட்டப் பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

இரண்டாயிரத்து 152 கிலோமீட்டர் தொலைவுக்கு தமிழகத்தில் ரயில் பாதைகள் மின்மயமாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளர்.

தமிழகத்திற்கு ஆறு வந்தேபாரத் ரயில்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள திரு எல் முருகன், அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ் 77 ரயில் நிலையங்கள் புதிய பரிமாணம் பெற்றுள்ளதாகவும் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

மேட்டூர் அணையின் கிழக்கு மற்றும் மேற்கு கால்வாய் மூலம் இன்று மாலை பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடப்பபட்டது.

137 நாட்களுக்கு திறந்துவிடப்படும் இந்த நீரினால் சேலம், நாமக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள 45 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதிபெறும்.

மேட்டூர் அணை முழு கொள்ளளவை எட்டியுள்ளதால், விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று அணையிலிருந்து இந்த கால்வாய் பகுதிகளுக்கு தண்ணீர் திறந்துவிட முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் உத்தரவிட்டிருந்தார்.

**[]<<<>>>[]**

பாரிஸ் ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கு இரண்டாவது பதக்கம் கிடைத்துள்ளது.

துப்பாக்கி சுடும் போட்டியில் 10 மீட்டர் கலப்புக் குழு பிரிவில் மனுபாக்கர் - **Sarabjot Singh** இணை வெண்கலம் வென்றது.

பதக்கம் வென்றுள்ள இந்திய குழுவுக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திரமோடி, குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர், மத்திய அமைச்சர்கள் திரு அமித்ஷா, திரு ஜெய்சங்கர், திரு எல் முருகன் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பதக்கப்பட்டியலில் இதுவரை ஜப்பான் ஆறு தங்கம் உட்பட 12 பதக்கங்களுடன் முதலிடத்தை பிடித்துள்ளது.

ஐந்து தங்கம் உட்பட 16 பதக்கங்களுடன் பிரான்ஸ் இரண்டாவது இடத்தையும், சீனா ஐந்து தங்கம் உட்பட 12 பதக்கங்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

இந்தியா இரண்டு வெண்கலப்பதக்கங்களுடன் 27-வது இடத்தில் உள்ளது.

ஹாக்கிப் போட்டியில் இந்தியா, அயர்லாந்தை இரண்டு – பூஜ்ஜியம் என்ற கோல் கணக்கில் வென்றது.

அடுத்ததாக பெல்ஜியம் மற்றும் ஆஸ்திரேலியா அணிகளுடன் இந்தியா மோதவுள்ளது. பிரிவு-பி-யில் இடம்பெற்றுள்ள இந்தியா முதல் நான்கு இடங்களுக்குள் வந்தால் காலிறுதிக்கு முன்னேறும்.

***End of News***